**நாள் : 23.12.2022**

## அசல் வழக்கு எண்: 13/2013

வா.சா.-1 தங்கமணி முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி முன்னிலை, என்னால் சத்தியபிரமாண வாக்குமூலம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

மேற்படி வா.சா.1 தங்கமணி கடந்த 15.07.2022, 28.07.2022, 11.08.2022 மற்றும் 01.12.2022 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு மேற்படி குறுக்கு விசாரணை முடிவு பெறாமல் இன்று மேற்படி சாட்சியின் குறுக்கு விசாரணை தொடரப்படுகிறது.

**56.** இந்த வழக்கு முதன்முதலில் என்னால் மன்னார்குடி சார்வு நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான் . மேற்படி வழக்கு எதற்காக அங்கிருந்து திருப்பப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை . . மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதியாக நாகப்பட்டினம் மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரிதான் . மேற்படி வழக்கு சில குறைகள் காரணமாக திருப்பப்பட்டது என்றால் சரிதான் . அவ்வாறு திருப்பப்பட்ட வழக்கை 696 நாட்கள் கழித்து நான் திரும்பத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

57. மேற்படி காலதாம மனு மீதான விசாரணையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் . மேற்படி விசாரணையில் நான் வெளிநாட்டில் இருந்ததற்கான கடவு சீட்டின் நகலை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தேன் என்றால் சரிதான் . மேற்படி கடவுசீட்டின் நகல் நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான் . மேற்படி கடவுசீட்டின் நகலின்படி 07.04.2009 லிருந்து 30.05.2009 வரை ஒரு தடவை நான் வெளிநாடு சென்றுவந்த பதிவு உள்ளது என்றால் சரிதான்.

58. 21.11.2009 லிருந்து 29.11.2009 வரை 30 நாள் பயணமாக இரண்டாவது முறை வெளிநாடு சென்றுவந்தேன் என்றால் சரிதான் . இந்த வழக்கின் பிராது பக்கம் 5-ல் முதல் பத்தியில் 28.07.2009 ல் மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் 04.08.2009 க்குள் 30 நாட்களில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

59. இந்த வழக்கில் எத்தனை சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இந்த வழக்கில் ஒரு சொத்து மொத்தம் நான்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஒவ்வொரு வழக்கிலும் சொத்துக்களும் நான்கெல்லையும் குறிப்பிடப்பட்டுள்ளன . வா.சா.ஆ.1 ஆவணத்தில் எத்தனை சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 4 சர்வே எண்கள் உள்ளது. ஆனால் இந்த வழக்கில் ஒரு சர்வே எண் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் மற்ற சொத்துக்களைப்பற்றி எனக்கு தெரியாது.

60. மேற்படி வா.சா.ஆ.1ல் உள்ள 2 முதல் 4 வரையான சர்வே எண் சொத்துக்கள் என்னுடைய சொத்தான என்றால் இல்லை எனக்கு சொந்தமானது இல்லை . நான் பதற்றத்தில் சொல்கிறேன் என்றாலும் , நான் வைத்துள்ள மணி மருத்துவமனை சொத்துக்கான சர்வே எண் என்றாலும் எனக்கு சரியாக தெரியவில்லை . மேற்படி 2 முதல் 4 வரையுள்ள சர்வே எண்களைப்பொறுத்து நான் அடமானம் ஏதும் பதிவு செய்தேனா என்றால் ஆம் 2022 ம் ஆண்டு 3 வது மாதம் அடமான பத்திரம் பதிந்தேன் . யாருக்கு பதிவு செய்தேன் என்றால் எனக்கு தற்சமயம் நினைவில் இல்லை.

61. நான் வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள சர்வே எண் .2 முதல் 4 வரையான சர்வே எண்களை பொறுத்து அடமான பதிவு செய்துள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை ஆனால் மணி மருத்துவமனை உள்ள இடத்தைதான் அடமானமாக எழுதிக்கொடுத்தேன் . மேற்படி சர்வே எண் .1ல் உள்ள சொத்தினை ஏன் அடமானமாக எழுதிக்கொடுக்கவில்லை என்றால் கடன் கொடுத்தவர்கள் எதை எழுதிக்கேட்கிறார்களோ அதைதான் எழுதிக்கொடுக்க முடியும். மேற்படி வா.சாஆ.1 ஆவணத்தை நான் பகுதியாக ஆட்சேபனை செய்கிறேனா அல்லது முழுமையாக ஆட்சேபனை செய்கிறேனா என்றால் முழுமையாக ஆட்சேபனை செய்கிறேன்.

62. அவ்வாறு நான் முழுமையாக ஆட்சேபனை செய்திருந்தால் மேற்படி 4 அயிட்ட சொத்துகளையும் வழக்குச்சொத்தாக கண்டுதான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் . என்று சொன்னால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் உத்தரவின் படி 4 அயிட்ட சொத்துக்களும் வழக்கு சொத்துகள் என்றால் சரிதான் . இந்த வழக்கில் நான் 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை சேர்க்காததற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் இல்லை. 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை நான் எந்த பரிகாரமும் பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்கவில்லை என்றால் கேட்கவேண்டிய தேவையில்லை . தேவைக்குத்தான் வழக்கு போடுவேன் என்றால் ஆம்.

63. மேற்படி 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து ஏதேனும் வழக்குரையில் ஜாமின் சொத்துக்கள் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை . 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து நான் எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் இல்லை . 2 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் ஜாமின் சொத்துக்களாக இருப்பது குறித்து ஆட்சேபனை உள்ளதா என்றால் ஜாமின் சொத்து என்பதால் ஆட்சேபனை இல்லை.

64. மேற்படி வா.சா.ஆ.1 ஏற்பட்ட காலத்தில் மேற்படி ஆவணத்தில் 1வது அயிட்ட சொத்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்திற்கு அடமானமாக இருந்தது என்றால் சரிதான் என் மனைவி கடன் வாங்கினார்கள் நான் வாங்கவில்லை. நானும் என் மனைவியும் சேர்ந்துதான் இருந்தோம் என்றால் சரிதான் . 1வது அயிட்ட சொத்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தில் அடமானமாக இருந்ததால்தான் நான் 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை ஜாமீனாகக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

65. மேற்படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்திற்கு கொடுத்த சொத்து எப்போது மீட்கப்பட்டது 2012 ல் என்றால் சரிதான் . யார் கடனை தீர்த்தார்கள் என்றால் என் மனைவிதான் தீர்த்தார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வில்லங்க சான்றிதழ் ஏதும் வாங்கி தாக்கல் செய்தேனா என்றால் இல்லை . அவ்வாறு வில்லங்க சான்றிதழைப் பார்த்தால் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்திற்கு யார் எழுதிக்கொடுத்தது யார் கடன் தீர்த்தது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

66. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு மதிப்பு கேட்ட பரிகாரத்திற்காக அல்லது வழக்கு சொத்துக்கா என்றால் நீதிமன்றத்திற்காகத்தான் . எதற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டுள்ளேன் என்றால் பிரதிவாதி மேற்படி தாவா சொத்தைப் பொறுத்து எந்தவித பெந்தக பாராதீனமும் செய்யக்கூடாது என கேட்டுள்ளேன் . தாவா சொத்தை பிரதிவாதிகள் விற்பனை செய்ய முயற்சி செய்வதாக 2009 ல் புரேக்கர் மூலம் கேள்விபட்டேன். அது சம்மந்தமாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை நேரடியாக நீதிமன்றம் வந்துவிட்டேன்.

67. மாவட்ட பதிவாளர் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை இதற்கிடைப்பட்ட காலத்தில் ஏதேனும் பிரதிவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. 04.08.1997 க்கு பிறகு நான் வெளிநாட்டில் ஒரு 10 நாள் மற்றும் ஒரு 30 நாள் மொத்தம் 40 நாட்கள் தான் இருந்தேன் என்றால் சரிதான் . மற்ற நாட்களில் நான் ஊரில்தான் இருந்தேன் என்றால் சரியல்ல நான் வெளி மாநிலங்களில் இருந்தேன். வெளிநாட்டிலும் இருந்தேன்.

68. 04.08.1997 முதல் வழக்கு தாக்கல் செய்யப்படும் காலம் வரை நான் வெளிநாட்டிற்கு பயணம் செய்த கடவு சீட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும் செய்கிறேன். நான் மொத்தமே 40 நாட்கள் மட்டுமே வெளிநாட்டில் இருந்தேன் என்றாலும் காலாவதியான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மேற்படி காலாவதிக்கு வெளிநாட்டில் இருந்தேன் என்பதை காரணமாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . அதனால் சட்டப்படியும், காலாவதி தோஷத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

*(Sd/- A.S. Ameerdheen)*
District Munsif
Mannargudi.